ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2087/82 - 2018 සැප්තැම්බර් මස 07 වැනි සිකුරාදා - 2018.09.07

*2087/82 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 07 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV(அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### வடமேல் மாகாண மாகாண சபை

*1990 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வடமேல் மாகாண சூழல் நியதிச் சட்டம்*

**39 ஆம் பிரிவின் கீழான கட்டளை**

*1990 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வடமேல் மாகாண சூழல் நியதிச் சட்டத்தின் 39 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி வடமேல் மாகாண சூழல் விடயப் பொறுப்புடைய அமைச்சர் ஆகிய என்னால், 2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி தொடக்கம் தத்துவங்களின் பயனைக் கொண்டு இக்கட்டளை மூலம் -*

1. (i) நாட்டின் பயன்பாட்டுக்கென தடிப்பத்தில் இருபது (20) மைக்ரோன் அல்லது அதற்குக் குறைந்த பொலித்தின் அல்லது ஏதேனும் பொலித்தின் உற்பத்திப் பொருளை உற்பத்தி செய்வதனையும் ; அத்துடன்

   (ii) தடிப்பத்தில் இருபது (20) மைக்ரோன் அல்லது அதற்கு குறைந்த பொலித்தின் அல்லது பொலித்தின் உற்பத்திப் பொருளை வடமேல் மாகாணத்தினுள் விற்பனை செய்வதனை, விற்பனைக்காக முன்வைப்பதனை, இலவசமாக வழங்குவதனை காட்சிப்படுத்துவதனை அல்லது பயன்படுத்துவதனை

தடை செய்கின்றேன்.

ஆயினும், கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள அனுமதிபெற்ற பயன்பாடுகளுக்காக தடிப்பத்தில் இருபது (20) மைக்ரோன் அல்லது அதற்கு குறைந்த பொலித்தினை அல்லது பொலித்தின் உற்பத்திப் பொருள் அதிகார சபையின் எழுத்திலான முன் அங்கீகாரத்துடன் பயன்படுத்தப்படலாம்.

2. 2008 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 15 ஆந் திகதிய 1567/4 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளை, அதன் கீழ் ஆக்கப்பட்ட எதற்கும் பங்கமின்றி இத்தால் இல்லாதொழிக்கப்படுகின்றது என்பதனை வெளிப்படுத்துகின்றேன்.

இக்கட்டளையின் நோக்கங்களுக்காக —

"அதிகாரசபை" என்பது, 1990 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, வடமேல் மாகாண சுற்றாடல் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட வடமேல் மாகாண சூழல் அதிகார சபை எனப்பொருள்படும்.

1A - PG 4205 — 42 (2018/09)

இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

"பொலித்தின்" என்பது, எல்லா வடிவங்களிலுமான பொலிஎத்திலின், பொலிபிரோப்பலின், பொலியெஸ்டரின், பொலிவினைல்குளோரைட், பொலிஎத்திலின், டெரெப்தலேட் அல்லது வேறு ஏதேனும் ஒத்த மூலப்பொருள் எனப்பொருள்படும்.

தர்மசிறி தசநாயக்க,
வடமேல் மாகாண முதலமைச்சரும்
நிதி மற்றும் திட்டமிடல், சட்டமும் சமாதானமும், கல்வி, உள்ளூராட்சி மற்றும்
மாகாண நிருவாக, பொருளாதார மேம்பாடு, சுற்றாடல் நடவடிக்கை,
நீர் வழங்கலும் வடிகாலமைப்பும் மற்றும் சுற்றுலா நடவடிக்கை பற்றிய மாகாண அமைச்சரும்.

முதலமைச்சர் அலுவலகம்,
குருநாகல்,
*2018, ஓகத்து 30.*

**அட்டவணை**

அனுமதிக்கப்பட்ட பயன்பாடுகள்

(1) மென்தகடாக்கும் நோக்கத்துக்காக பின்வரும் பொருட்களைப் பயன்படுத்தல் :-

(அ) உலோகப்படுத்தப்பட்டதாயினும் அல்லது இல்லாவிடினும் பொலிஎத்திலின் டெரெப்தலேட் (PET) அல்லது ஹோலோகிராபிக் மென் படலங்கள் ;

(ஆ) உலோகப்படுத்தப்பட்டதாயினும் அல்லது முத்துப்போலாக்கப்பட்டதாயினும் (pearlized) அல்லது இல்லாவிடினும் பொலிபிரோப்பலின் (PP) மென் படலங்கள் ;

(இ) நைலோன் ;

(ஈ) காஸ்ட் பொலிபிரோப்பலின் (CPP) அல்லது உலோகப்படுத்தப்பட்ட காஸ்ட் பொலிபிரோப்பலின் (CPP) ;

(உ) பொலிவினைல்குளோரைட் (PVC) ;

(ஊ) பொலிஎத்திலின் டெரெப்தலேட் கிளைகோல் (PETG).

(2) வேறேதேனும் பொருத்தமான மாற்றீடு இல்லாத போது மருத்துவம்சார் அல்லது மருந்தகங்களின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்துதல்.

*09-582/1*

---

**வடமேல் மாகாண மாகாண சபை**

*1990 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வடமேல் மாகாண சூழல் நியதிச் சட்டம்*

**39 ஆம் பிரிவின் கீழான கட்டளை**

*1990 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வடமேல் மாகாண சூழல் நியதிச் சட்டத்தின் 39 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி வடமேல் மாகாண சூழல் விடயப் பொறுப்புடைய அமைச்சர் ஆகிய என்னால், 2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி தொடக்கம் தத்துவங்களின் பயனைக்கொண்டு இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட செயற்பாடுகளைத் தடை செய்கின்றேன்.*

தர்மசிறி தசநாயக்க,
வடமேல் மாகாண முதலமைச்சரும்
நிதி மற்றும் திட்டமிடல், சட்டமும் சமாதானமும், கல்வி, உள்ளூராட்சி மற்றும்
மாகாண நிருவாக, பொருளாதார மேம்பாடு, சுற்றாடல் நடவடிக்கை,
நீர் வழங்கலும் வடிகாலமைப்பும் மற்றும் சுற்றுலா நடவடிக்கை பற்றிய மாகாண அமைச்சரும்.

முதலமைச்சர் அலுவலகம்,
குருநாகல்,
*2018, ஓகத்து 30.*

**அட்டவணை**

செயற்பாடுகள் :

(i) நாட்டின் பயன்பாட்டுக்கென பொலித்தினை மூலப்பொருளாகக் கொண்டு உணவு உறைகளை உற்பத்தி செய்தல் ; அத்துடன்

(ii) வடமேல் மாகாணத்தினுள் பொலித்தினை மூலப்பொருளாகக் கொண்டு ஆக்கப்பட்ட உணவு உறைகளை விற்பனை செய்தல், விற்பனைக்காக முன்வைத்தல், இலவசமாக வழங்குதல், காட்சிக்கு வைத்தல் அல்லது பயன்படுத்துதல்.

இக்கட்டளையின் நோக்கங்களுக்காக –

"உணவு உறைகள்" என்பது, "லன்ச் சீட்" இனை உள்ளாக்குகின்றது.

"பொலித்தின்" என்பது, உயர் அடர்த்தி பொலிஎத்திலின், தாழ் அடர்த்தி பொலிஎத்திலின் மற்றும் பொலிபிரோப்பலின் என்பவற்றை உள்ளடக்குகின்றது.

*09-582/2*

---

**வடமேல் மாகாண மாகாண சபை**

*1990 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வடமேல் மாகாண சூழல் நியதிச் சட்டம்*

***39 ஆம் பிரிவின் கீழான கட்டளை***

*1990 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வடமேல் மாகாண சூழல் நியதிச் சட்டத்தின் 39 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி வடமேல் மாகாண சூழல் விடயப் பொறுப்புடைய அமைச்சர் ஆகிய என்னால், 2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி தொடக்கம் தத்துவங்களின் பயனைக்கொண்டு இக்கட்டளை மூலம் இதற்கான அட்டவணை I இல் குறித்துரைக்கப்பட்ட செயற்பாடுகளைத் தடைசெய்து, அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட விடயங்களிற்கு விலக்களிக்கின்றேன்.*

தர்மசிறி தசநாயக்க,
வடமேல் மாகாண முதலமைச்சரும்
நிதி மற்றும் திட்டமிடல், சட்டமும் சமாதானமும், கல்வி, உள்ளூராட்சி மற்றும்
மாகாண நிருவாக, பொருளாதார மேம்பாடு, சுற்றாடல் நடவடிக்கை,
நீர் வழங்கலும் வடிகாலமைப்பும் மற்றும் சுற்றுலா நடவடிக்கை பற்றிய மாகாண அமைச்சரும்.

முதலமைச்சர் அலுவலகம்,
குருநாகல்,
*2018, ஓகத்து 30.*

**அட்டவணை I**

செயற்பாடுகள் :

1. (i) நாட்டின் பயன்பாட்டுக்கென உயர் அடர்த்தி பொலித்தினை மூலப்பொருளாகக் கொண்டு ஆக்கப்பட்ட ஏதேனும் பையை உற்பத்தி செய்தல் ; அத்துடன்

(ii) வடமேல் மாகாணத்தினுள் உயர் அடர்த்தி பொலிஎத்தினை மூலப்பொருளாகக் கொண்டு உற்பத்தி செய்யப்பட்ட ஏதேனும் பையை விற்பனை செய்தல், விற்பனைக்காக முன்வைத்தல், இலவசமாக வழங்குதல், காட்சிப்படுத்தல் அல்லது பயன்படுத்துதல்.

இவ்வட்டவணையின் நோக்கங்களுக்காக உயர் அடர்த்தி பொலிஎத்தினை மூலப்பொருளாகக் கொண்டு ஆக்கப்பட்ட பைகள் என்பது, உற்பத்திப் பொருட்கள் அல்லது பண்டங்களை கொண்டு செல்லும் நோக்கத்துக்காக கைப்பிடிகளுடனான அல்லது கைப்பிடிகளற்ற ஏதேனும் பரிமாணத்திலான பைகளை உள்ளடக்குமென்பதுடன் பொதுவாக "சிலி – சிலி பைகள்" எனக் குறிப்பீடு செய்யப்படும் பலசரக்குப் பைகளையும் உள்ளடக்கும்.

**அட்டவணை II**

விலக்களிக்கப்பட்ட விடயங்கள் :

(1) பின்வரும் பரிமாணத்தில் அல்லது அதற்கு மேலான பரிமாணத்திலான குப்பைகளுக்கான பைகள் :

| | | |
|---|---|---|
| நீளம் | - | 600 மிமீ |
| அகலம் | - | 260 மிமீ |
| உயரம் | - | 900 மிமீ |

(2) பின்வரும் பரிமாணத்தில் அல்லது அதற்கு மேலான பரிமாணத்திலான புடவைப் பைகள்:

| | | |
|---|---|---|
| நீளம் | - | 400 மிமீ |
| உயரம் | - | 500 மிமீ |

09-582/3

---

**வடமேல் மாகாண மாகாண சபை**

1990 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வடமேல் மாகாண சூழல் நியதிச் சட்டம்

**39 ஆம் பிரிவின் கீழான கட்டளை**

1990 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வடமேல் மாகாண சூழல் நியதிச் சட்டத்தின் 61 ஆம் பிரிவுடன் வாசிக்கப்படும், அச்சட்டத்தின் 27 மற்றும் 28 ஆம் பிரிவின் கீழ் வடமேல் மாகாண சூழல் விடயப் பொறுப்புடைய அமைச்சர் ஆகிய என்னால், கீழ்க்காணப்படும் கட்டளை ஆக்கப்பட்டுள்ளது பற்றி அறிவித்தல் விடுக்கின்றேன்.

தர்மசிறி தசநாயக்க,
வடமேல் மாகாண முதலமைச்சரும்
நிதி மற்றும் திட்டமிடல், சட்டமும் சமாதானமும், கல்வி, உள்ளூராட்சி மற்றும்
மாகாண நிருவாக, பொருளாதார மேம்பாடு, சுற்றாடல் நடவடிக்கை,
நீர் வழங்கலும் வடிகாலமைப்பும் மற்றும் சுற்றுலா நடவடிக்கை பற்றிய மாகாண அமைச்சரும்.

முதலமைச்சர் அலுவலகம்,
குருநாகல்,
2018, ஓகத்து 30.

ஒழுங்குவிதிகள்

(1) இவ்வொழுங்குவிதிகள், 2018 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, மாகாண சுற்றாடல் (குப்பை கூளங்கள் மற்றும் பிளாஸ்டிக் உட்பட்ட வேறு எரியக்கூடிய பொருட்களைத் திறந்த வெளியில் எரித்தலை தடைசெய்தல்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டலாம்.

(2) ஆளெவரும் குப்பை கூளங்களையும் பிளாஸ்டிக் உள்ளடங்கலாக வேறு எரியக்கூடிய பொருட்களைத் திறந்தவெளியில் எரிக்கவோ அல்லது எரிக்கச் செய்தலோ அல்லது திறந்தவெளியில் எரித்தலை அனுமதிக்கவோ அல்லது எரிக்கவிடுதலோ ஆகாது.

(3) மேலுள்ள ஒழுங்குவிதிகளுடன் இணங்கியொழுகத் தவறும் எவரேனும் ஆள், 1990 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வடமேல் மாகாண சூழல் சட்டத்தின் கீழ் தவறொன்றிற்கு ஆளாதலும் 60 ஆம் பிரிவின் கீழ் தண்டிக்கப்படற்பாலாதலும் வேண்டும்.

09-582/4

**வடமேல் மாகாண மாகாண சபை**

*1990 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வடமேல் மாகாண சூழல் சட்டம்*

***39 ஆம் பிரிவின் கீழான கட்டளை***

*1990 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வடமேல் மாகாண சூழல் சட்டத்தின் 39 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி வடமேல் மாகாண சூழல் விடயப் பொறுப்புடைய அமைச்சர் தர்மசிறி தசநாயக்க ஆகிய நான், இக்கட்டளை மூலம் வடமேல் மாகாணத்தினுள் எல்லா வகையிலான பொலிஎத்தின், பொலிபிரோப்பலின், பொலிஎத்திலின் உற்பத்தி பொருட்கள் அல்லது பொலிபிரோப்பலின் உற்பத்திப் பொருட்கள் அரசியல், சமூக, கலாச்சார அல்லது வேறு ஏதேனும் நிகழ்வில் அல்லது நிகழ்ச்சியில் அலங்கரிப்பதற்காக பயன்படுத்தப்படுவதை இக்கட்டளை மூலம் தடை செய்கின்றேன்.*

*தர்மசிறி தசநாயக்க,*
*வடமேல் மாகாண முதலமைச்சரும்*
*நிதி மற்றும் திட்டமிடல், சட்டமும் சமாதானமும், கல்வி, உள்ளூராட்சி மற்றும்*
*மாகாண நிருவாக, பொருளாதார மேம்பாடு, சுற்றாடல் நடவடிக்கை,*
*நீர் வழங்கலும் வடிகாலமைப்பும் மற்றும் சுற்றுலா நடவடிக்கை பற்றிய மாகாண அமைச்சரும்.*

*முதலமைச்சர் அலுவலகம்,*
*குருநாகல்,*
*2018, ஓகத்து 30.*

*09-582/5*

---

**வடமேல் மாகாண மாகாண சபை**

*1990 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வடமேல் மாகாண சூழல் சட்டம்*

***39 ஆம் பிரிவின் கீழான கட்டளை***

*1990 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வடமேல் மாகாண சூழல் நியதிச் சட்டத்தின் 39 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி வடமேல் மாகாண சூழல் விடயப் பொறுப்புடைய அமைச்சரான தர்மசிறி தசநாயக்க ஆகிய என்னால், எனக்களிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு இக்கட்டளை மூலம் இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட செயற்பாடுகளைத் தடைசெய்கின்றேன்.*

*தர்மசிறி தசநாயக்க,*
*வடமேல் மாகாண முதலமைச்சரும்*
*நிதி மற்றும் திட்டமிடல், சட்டமும் சமாதானமும், கல்வி, உள்ளூராட்சி மற்றும்*
*மாகாண நிருவாக, பொருளாதார மேம்பாடு, சுற்றாடல் நடவடிக்கை,*
*நீர் வழங்கலும் வடிகாலமைப்பும் மற்றும் சுற்றுலா நடவடிக்கை பற்றிய மாகாண அமைச்சரும்.*

*முதலமைச்சர் அலுவலகம்,*
*குருநாகல்,*
*2018, ஓகத்து 30.*

**அட்டவணை**

செயற்பாடுகள் :

(i) நாட்டின் பயன்பாட்டுக்கென, விரிவடையக்கூடிய பொலியெஸ்டரிலிருந்து உணவுக் கொள்கலன்கள், தட்டுக்கள், கோப்பைகள் மற்றும் கரண்டிகளை உற்பத்தி செய்தல் ; அத்துடன்

(ii) விரிவடையக்கூடிய பொலியெஸ்டரிலிருந்து ஆக்கப்பட்ட உணவுக் கொள்கலன்களை, தட்டுக்களை, கோப்பைகளை மற்றும் கரண்டிகளை விற்பனை செய்தல், விற்பனைக்காக முன்வைத்தல், இலவசமாக வழங்குதல், காட்சிப்படுத்துதல் அல்லது பயன்படுத்துதல்.

இக்கட்டளையின் நோக்கங்களுக்காக –

"உணவுக் கொள்கலன்கள்" என்பது, சாப்பாட்டுப் பெட்டிகள் (Lunch Boxes) எனப் பொருள்படும்.

09-582/6

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.